ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2341/30 - 2023 ජූලි මස 19 වැනි බදාදා - 2023.07.19

*2341/30 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 4/ 81*(XIII)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

23ய (1) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23ய(1) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சூழல் அமைச்சர் நசீர் அஹமட் ஆகிய நான், 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் நாட்டிலான பயன்பாட்டுக்காக பின்வரும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டையும் மற்றும் ஏதேனும் செயல்முறையில், வியாபாரத்தில் அல்லது கைத்தொழிலில் சொல்லப்பட்ட பொருட்களின் பயன்பாட்டையும் இக்கட்டளையால் தடைசெய்கின்றேன்.

(i) ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்படும் உறிஞ்சுகுழாய் ;
(ii) விமானப் பயணத்தில் தவிர ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்படும் உணவுக் கொள்கலன்கள், பீங்கான்கள், கோப்பைகள், கரண்டிகள், முள்ளுக்கரண்டிகள் மற்றும் கத்திகள் ;
(iii) மாலைகள் ;
(iv) இடியப்பத்தட்டுகள்.

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக,

“கோப்பைகள்” என்பது, குடிப்பதற்கான கோப்பைகளை உள்ளடக்குகின்றது. ஆனால் யோகட் கோப்பைகளை உள்ளடக்காது ;

“உணவுக் கொள்கலன்கள்” என்பது, நாட்டிலான பயன்பாட்டுக்காக விசாலிக்கப்பட்ட பொலிஸ்டிரீனில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பெட்டிகள் எனப் பொருள்படும் ;

1A – PG 6393 – 1506 (2023/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

“பிளாஸ்டிக்” என்பது, பொலிஎதிலின் டெரெப்தாலேட் (PET), உயர் அடர்த்தி கொண்ட பொலிஎதிலின் (HDPE), குறைந்த அடர்த்தி கொண்ட பொலிஎதிலின் (LDPE), பொலிவைனல் குளோரைட் (PVC), பொலிபுரோபைலீன் (PP), பொலிஸ்டிரீன், விசாலிக்கப்பட்ட பொலிஸ்டிரீன், உயிரியற் சிதைவுறும் பிளாஸ்டிக் அல்லது வேறு ஏதேனும் அதே மூலப்பொருள் அல்லது அதன் எவையேனும் கலவை என்பவற்றின் எல்லா வடிவங்களும் எனப் பொருள்படும் ;

“செயல்முறை” என்பது, உற்பத்தி செய்தலை உள்ளடக்குகின்றது ;

“ஒரு தடவை மட்டும் பயன்படுத்தல்” என்பது, அப்புறப்படுத்துவதற்கு முன்னர் ஒரே தடவை பயன்படுத்துவதற்கென வடிவமைக்கப்பட்ட அல்லது உட்கருதப்பட்ட உற்பத்திப் பொருள் என்று பொருளாகும் ;

“உறிஞ்சு குழாய்” என்பது, உற்பத்திப் பொருட்களுடன் இணைக்கப்பட்ட உறிஞ்சு குழாய்களை உள்ளடக்குகின்ற எல்லா உறிஞ்சு குழாய்களும் எனப் பொருள்படும் ;

“வியாபாரம்” என்பது, உள்ளூர் பயன்பாட்டுக்காக விற்பனைக்காக, விற்பனைக்கான சலுகைக்காக, விற்பனைக்கான காட்சிப்படுத்தலுக்காக, கட்டணமின்றிய சலுகைக்காக அல்லது கண்காட்சிக்காக இறக்குமதி செய்தலை உள்ளடக்குகின்றது ;

*2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 1 ஆந் திகதிய 2034/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையானது, அதன்கீழ் ஆக்கப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.*

**நசீர் அஹமட்,**
*சூழல் அமைச்சர்.*

கொழும்பு,
*2023, யூலை 13.*

EOG *07-0180*